©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 8.00 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 26] சென்னை, புதன்கிழமை, ஜுலை 7, 2010
ஆனி 23, திருவள்ளுவர் ஆண்டு–2041

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு மே திங்கள் 20–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்டம் எண் 16/2010**

**1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இஃது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

**89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

2. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 89–ஆம் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், ‘‘ஒன்பது ஆண்டுகள்’’ என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘ஒன்பது ஆண்டுகள் ஆறு மாதங்கள்’’ என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு மே திங்கள் 22–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்டம் எண் 17/2010**

## 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2010–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1–ஆம் நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மூன்றாம் இணைப்புப் பட்டியலுக்குப் பதிலாக அமைத்தல்.

2. 1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தில் மூன்றாம் இணைப்புப்பட்டியலுக்குப் பதிலாக, பின்வரும் இணைப்புப்பட்டியலானது அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:— தமிழ்நாடு சட்டம் 13/1974.

**"மூன்றாம் இணைப்புப்பட்டியல்**

**[4(1-A) எனும் பிரிவைக் காண்க]**

**பகுதி–1**

**புதிய இயக்கூர்திகள்**

| | **வரிவீதம்** |
|---|---|
| பதிவு செய்யப்படும்போது | (i) ஊர்தியின் மொத்த மதிப்பானது பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத நிலையில்–நூற்றுக்கு 10 விழுக்காடு. |
| | (ii) ஊர்தியின் மொத்த மதிப்பானது பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிற நிலையில்–நூற்றுக்கு 15 விழுக்காடு. |

**பகுதி–II**

**பழைய இயக்கூர்திகள்**

1988-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மையச் சட்டம் 59/1988) 47–ஆம் பிரிவின்படி புதிய பதிவு எண்குறி வழங்கப்பட்ட காலத்திலோ அல்லது இம்மாநிலத்தில் ஓடிக்கொண்டிருக்கின்ற மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள பழைய இயக்கூர்திகளாக இருந்து அதன் வயதானது:—

## வரிவீதம்

| | **ஊர்தியின் மதிப்பு பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத நிலையில்.** | **ஊர்தியின் மதிப்பு பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிற நிலையில்.** |
|---|---|---|
| 1 ஓராண்டுக்கு மேற்படாமல் இருக்குமானால். | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 8.75 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 13.75 விழுக்காடு. |
| 2. ஓராண்டுக்கு மேற்பட்டு ஆனால் இரண்டாண்டுகளுக்கு மேற்படாமல் இருக்குமானால். | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 8.50 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 13.50 விழுக்காடு. |
| 3. இரண்டாண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் மூன்றாண்டுகளுக்கு மேற்படாமல் இருக்குமானால். | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 8.25 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 13.25 விழுக்காடு. |
| 4. மூன்றாண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் நான்காண்டுகளுக்கு மேற்படாமல் இருக்குமானால். | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 8.00 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 13.00 விழுக்காடு. |
| 5. நான்காண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் ஐந்தாண்டுகளுக்கு மேற்படாமல் இருக்குமானால். | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 7.75 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 12.75 விழுக்காடு. |
| 6. ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் ஆறாண்டுகளுக்கு மேற்படாமல் இருக்குமானால். | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 7.50 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 12.50 விழுக்காடு. |
| 7. ஆறாண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் ஏழாண்டுகளுக்கு மேற்படாமல் இருக்குமானால். | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 7.25 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 12.25 விழுக்காடு. |
| 8. ஏழாண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் எட்டாண்டுகளுக்கு மேற்படாமல் இருக்குமானால். | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 7.00 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 12.00 விழுக்காடு. |
| 9. எட்டாண்டு களுக்கு மேற்பட்டு ஆனால் ஒன்பதாண்டுகளுக்கு மேற்படாமல் இருக்குமானால். | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 6.75 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 11.75 விழுக்காடு. |
| 10. ஒன்பதாண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் பத்தாண்டுகளுக்கு மேற்படாமல் இருக்குமானால் | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 6.50 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 11.50 விழுக்காடு. |
| 11. பத்தாண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் பதினோராண்டுகளுக்கு மேற்படாமல் இருக்குமானால். | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 6.25 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 11.25 விழுக்காடு. |
| 12. பதினோராண்டுகளுக்கு மேற்பட்டு இருக்குமானால். | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 6.00 விழுக்காடு. | ஊர்தியின் மதிப்பின் நூற்றுக்கு 11.00 விழுக்காடு. |

**விளக்கம்.**—இந்த இணைப்புப் பட்டியலின் நோக்கத்திற்காக, "ஊர்தியின் மதிப்பு" என்றால், அந்த ஊர்தியை விலைக்கு வாங்குகையில், வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய முறையில் தீர்மானிக்கப்பட்ட விலை என்று பொருள்படும்.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்டம் எண் 19/2010**

**1873–ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தையும் 1892–ஆம் ஆண்டு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தையும் மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் (திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் III/1873

**III/1873 எனும் எண்ணிட்ட மையச் சட்டத்திற்கான திருத்தம்.**

2. 1873–ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தின் 12–ஆம் பிரிவில், முதலாம் பத்தியில், இரண்டு இடங்களில் வருகின்ற ''ஐந்து இலட்ச ரூபாய்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ''பத்து இலட்ச ரூபாய்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் VII/1892

**VII/1892 எனும் எண்ணிட்ட மையச் சட்டத்திற்கான திருத்தம்.**

3. 1892–ஆம் ஆண்டு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தில்,–

(1) 4–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில்,–

(a) இரண்டு இடங்களில் வருகின்ற ''ஐந்து இலட்ச ரூபாய்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ''பத்து இலட்ச ரூபாய்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) ''பத்து இலட்ச ரூபாய்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''இருபத்தைந்து இலட்ச ரூபாய்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) 15–ஆம் பிரிவில் தற்போது இருந்து வருகின்ற (2–C) எனும் உட்பிரிவானது, (2–D) எனும் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (2–D) எனும் உட்பிரிவிற்கு முன்பு பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும் அதாவது:–

''(2–C) மேல்முறையீடுகளின் பொருட்பாட்டினைப் பொறுத்த அளவிலான தொகை அல்லது மதிப்பானது மூன்று இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத நிலையில், உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்ற அத்தகைய மேல்முறையீடுகள் அனைத்தும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்படுவதாதல் வேண்டும்.'';

**மாறுதற்கால வகைமுறை.**

4. (1) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் நிலுவையிலுள்ளதும் இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1873–ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தின் (மையச் சட்டம் III/1873) வகைமுறைகளின்படி சார்நிலை நீதிமன்றத்தின் விசாரணை வரம்பிற்குட்பட்டு இருக்கிறதுமான உரிமை வழக்குகள் அனைத்தும் அந்தப் பொருட்பாட்டின் மீது அதிகாரவரம்பைக் கொண்டிருக்கின்ற சார்நிலை நீதிமன்றத்திற்கு மாற்றப்படுவதாதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஒரு கூடுதல் நீதிபதியொருவரின் அல்லது ஒரு முதன்மை நீதிபதியொருவரின் முன்பு அல்லது உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளதும் இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1892–ஆம் ஆண்டு சென்னை மாநகர உரிமையியல்

நீதிமன்றச் சட்டத்தின் (மையச் சட்டம் VII/1892) வகைமுறைகளின்படி சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் விசாரணை வரம்பிற்குட்பட்டு இருக்கிறதுமான உரிமை வழக்குகள் அனைத்தும் அந்தப் பொருட்பாட்டின் மீது அதிகாரவரம்பைக் கொண்டிருக்கிற உதவி நீதிபதி, கூடுதல் நீதிபதி அல்லது முதன்மை நீதிபதிக்கு மாற்றப்படுவதாதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு மே திங்கள் 26–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்டம் எண் 20/2010**

***விற்பனை வரி தொடர்பான வரி, தண்டத் தொகை அல்லது வட்டித்தொகை நிலுவைகளைத் தீர்வு செய்வதற்கு வகை செய்வதற்காகவும் அது தொடர்பான மற்றும் இடை விளைவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமானதொரு சட்டம்.***

தமிழ்நாடு சட்டம் 1/1959. தமிழ்நாடு சட்டம் 24/1971. தமிழ்நாடு சட்டம் 14/1970. மையச் சட்டம் 74/1956.

நீக்கம் செய்யப்பட்ட 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், நீக்கம் செய்யப்பட்ட 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரிச்) சட்டம், நீக்கம் செய்யப்பட்ட 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1956–ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றின்படியான வரி, தண்டத்தொகை அல்லது நேர்விற்கேற்ப வட்டித்தொகை நிலுவைகளைத் தீர்வு செய்வதற்காக வகை செய்வது உகந்ததாக இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. **(1)** இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

**(2)** இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

**(3)** இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. **(1)** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,– பொருள் வரையறைகள்.

(a) "விண்ணப்பதாரர்" என்றால், தொடர்புடைய சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான வணிகர் ஒருவர் எனப் பொருள்படும்.

(b) "வரி, தண்டத் தொகை அல்லது வட்டித்தொகை நிலுவைகள்" என்றால், தொடர்புடைய சட்டத்தின்படி 2007–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளுக்கு முன்னதாக கணிப்பு செய்யப்பட்டிருக்கிற மற்றும் இந்தச் சட்டத்தின்படி விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட தேதியன்று வசூலிக்கப்படுவதற்கு நிலுவையிலுள்ள,

(i) தொடர்புடைய சட்டத்தின்படி வரிக் கணிப்பின் பேரில் விண்ணப்பதாரர் ஒருவரால் செலுத்தத்தக்க கூடுதல் விற்பனை வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி, மைய விற்பனை வரி உள்ளடங்கலான வரி; அல்லது

(ii) தொடர்புடைய சட்டத்தின்படி விண்ணப்பதாரர் ஒருவரால் செலுத்தப்படத்தக்க தண்டத்தொகை; அல்லது நேர்விற்கேற்ப

(iii) தொடர்புடைய சட்டத்தின்படி விண்ணப்பதாரர் ஒருவரால் செலுத்தப்படத்தக்க வட்டித் தொகை எனப் பொருள்படும்.

(c) "பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பு" என்றால், 3–ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட ஓர் அதிகார அமைப்பு எனப் பொருள்படும்.

(d) "அரசு" என்றால், மாநில அரசு எனப் பொருள்படும்.

(e) "தொடர்புடைய சட்டம்" என்றால்,

தமிழ்நாடு சட்டம் 1/1959. (i) நீக்கம் செய்யப்பட்ட 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம்;

தமிழ்நாடு சட்டம் 24/1971. (ii) நீக்கம் செய்யப்பட்ட, 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரிச்) சட்டம்;

தமிழ்நாடு சட்டம் 14/1970. (iii) நீக்கம் செய்யப்பட்ட 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்;

(iv) 1956–ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டம் என்று பொருள்படும் மற்றும் அவற்றின்படி செய்யப்பட்ட விதிகளை அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகளை உள்ளடக்கும். மையச் சட்டம் 74/1956.

2. பொருளிலோ அல்லது தறுவாயிலோ முரணாக ஏதேனும் இருந்தாலன்றி, இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, பொருள்வரையறை செய்யப்படாமல், உள்ள சொற்றொடர்கள் அனைத்தும், தொடர்புடைய சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப்பட்டுள்ள அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும்.

பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பு.

**3.** இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அரசானது, அறிவிக்கை வாயிலாக, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் 48ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதிகார அமைப்புகளை பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்புகளாக நியமிக்கலாம்; மற்றும் அத்தகைய அதிகார அமைப்பு, அரசு, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கக் கூடிய பரப்பிடம் அல்லது பரப்பிடங்களின் மீது அதிகார வரம்பினைச் செலுத்துதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 32/2006.

தீர்வுக்கான தகுதியுடைமை

**4.** இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகளுக்கு உட்பட்டு, 2007–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளுக்கு முன்னதாக, தொடர்புடைய சட்டத்தின்படி எந்த வரி, தண்டத்தொகை அல்லது வட்டித் தொகை நிலுவைகளைப் பொறுத்த அளவில் வரிக் கணிப்பானது செய்யப்பட்டுள்ளதோ அந்த நிலுவைகளைத் தீர்வு செய்வதற்கான விண்ணப்பத்தினை, விண்ணப்பம் தாக்கல் செய்யப்படும் தேதியன்று, நீதிமன்றம் எதன்முன்பும் மேல்முறையீடு அல்லது சீராய்வு மனு எதுவும் அந்நிலுவைகளுக்கு எதிராக இல்லாத நிலையில் விண்ணப்பதாரர் ஒருவர் செய்யலாம்.

தீர்வு செய்வதற்கான விண்ணப்பம்.

**5.** (1) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக அல்லது அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, அவ்வப்போது, குறித்துரைக்கக் கூடியவாறு பின்னர் வருகின்ற ஒரு தேதிக்குள்ளாக வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும், அத்தகைய முறையிலும் 7 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தத்தக்க தொகையைச் செலுத்தியதற்கான நிரூபணத்துடன், 4–ஆம் பிரிவின் நோக்கத்திற்கான விண்ணப்பம் ஒன்று, விண்ணப்பதாரர் ஒருவரால், பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பிடம் செய்துகொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு வரிக் கணிப்பு ஆண்டுக்கும், தனித்தனியாக ஒவ்வொரு விண்ணப்பம் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரர், பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பின் முன்பு அத்தகைய விண்ணப்பத்தினைச் செய்த தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக, எந்த வரிக்கணிப்பு அதிகார அமைப்பு அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அல்லது சீராய்வு அதிகார அமைப்பின் முன்பாக நடவடிக்கை அல்லது மேல் முறையீடு அல்லது நேர்விற்கேற்ப சீராய்வானது தொடர்புடைய சட்டத்தின்படி முடிவுறாதிருக்கிறதோ, அந்த வரிக்கணிப்பு அதிகார அமைப்பின், மேல் முறையீட்டு அதிகார அமைப்பின் அல்லது சீராய்வு அதிகார அமைப்பின் முன்பு (1)–ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நகல் ஒன்றினை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பதாரரால் செலுத்தத்தக்க தொகையைத் தீர்மானித்தல்.

**6.** (1) பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, 5–ஆம் பிரிவின்படி செய்யப்பட்ட விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் சரியானவையா என்பதைத் தொடர்புடைய அனைத்துப் பதிவுருக்கள் தொடர்பாகச் சரிபார்த்தல் வேண்டும்; மற்றும் 7–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தத்தக்க தொகையைத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, விண்ணப்பதாரரால், (1)–ஆம் உட்பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட தொகையில் நூற்றுக்குப் பத்து விழுக்காட்டிற்கு மிகாத அளவில், விண்ணப்பத்துடன் செலுத்தப்பட்ட தொகை குறைவாக இருந்தால், வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பதாரரால் செலுத்தத்தக்க மேலுமான தொகையைக் கோரலாம்.

(3) விண்ணப்பதாரர், 7–ஆம் பிரிவின்படி செலுத்தத்தக்க தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காட்டினை விண்ணப்பத்துடன் செலுத்தாதிருந்தால், பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது விண்ணப்பத்தினை உடனடியாக நிராகரித்தல் வேண்டும்.

(4) (1)–ஆம் உட்பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட தொகையானது முழு ரூபாய்க்கு நெருக்கமாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்; மற்றும் இந்நோக்கத்திற்காக அத்தகைய தொகையானது ஒரு ரூபாயின் ஒரு பகுதியையும் கொண்டிருக்குமிடத்து; மற்றும் அத்தகைய பகுதியானது ஐம்பது பைசாவுக்கோ அல்லது அதற்கு மேலாகவோ இருந்தால், அடுத்த எண்ணிக்கையான ரூபாயாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய பகுதியானது ஐம்பது பைசாவுக்குக் குறைவாக இருந்தால், அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதில்லை.

**7.** விண்ணப்பதாரரால் செலுத்தத்தக்க தொகையும் கைவிடப்படவேண்டிய தொகையும் பின்வருமாறு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்:— செலுத்தப்படத் தக்கதெனத் தீர்மானிக்கப்படும் தொகைக்குப் பொருந்துகிற வீதம்.

(a) கணக்குகளைத் தாக்கல் செய்யாததன் காரணமாக, நன்தீர்ப்பின் பேரில் கணிக்கப்பட்ட வரி நிலுவைகளுடன் சேர்ந்த நேர் இணையான பணத்தண்டம் வட்டி ஆகிய நிலுவைகள் தொடர்பானதாக அது இருக்குமிடத்து, விண்ணப்பம் செய்யப்படும் தேதியன்று வசூலிப்பதற்கு நிலுவையிலுள்ள வரி நிலுவைகளில் மூன்றிலொரு பங்கினை வரி நிலுவைகளின் பேரில் ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு என்ற அளவில் கணக்கிடப்பட்ட வட்டியுடன் சேர்த்து விண்ணப்பதாரர் செலுத்துதல் வேண்டும்; மற்றும் அவ்வாறான வரியைச் செலுத்துவதன் பேரில், மீதமுள்ள வரி, வட்டி ஆகியனவும் மற்றும் தண்டத்தொகை முழுவதும் கைவிடப்படுதல் வேண்டும்.

(b) அந்த ஆண்டுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வரி விவர அறிக்கையின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட வரியைவிட அதிகமாக அமைந்த, விளம்புகைப் படிவங்களைத் தாக்கல் செய்யாததன் காரணமாக சேர்ந்துள்ள வரி நிலுவைகள் எதுவும் உள்ளடங்கலான வரி நிலுவைகளுடன் சேர்ந்த நேர் இணையான தண்டத்தொகை, வட்டி ஆகிய நிலுவைகள் தொடர்பானதாக அது இருக்குமிடத்து, விண்ணப்பம் செய்யப்படும் தேதியன்று வசூலிப்பதற்கு நிலுவையிலுள்ள வரி நிலுவைகளில் மூன்றிலொரு பங்கினை, வரி நிலுவைகளின் பேரில் ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு என்ற அளவில் கணக்கிடப்பட்ட வட்டியுடன் சேர்த்து விண்ணப்பதாரர் செலுத்துதல் வேண்டும்; மற்றும் அவ்வாறான வரியைச் செலுத்துவதன் பேரில், மீதமுள்ள வரி, வட்டித்தொகை ஆகியனவும் மற்றும் தண்டத்தொகை முழுவதும் கைவிடப்படுதல் வேண்டும்.

(c) அந்த ஆண்டுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வரி விவர அறிக்கையின்படி செலுத்தவேண்டிய வரியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரி நிலுவைகளுடன் சேர்ந்த நேர் இணையான தண்டத்தொகை, வட்டித்தொகை ஆகிய நிலுவைகள் தொடர்பானதாக அது இருக்குமிடத்து, வசூலிப்பதற்கு நிலுவையிலுள்ள வரி நிலுவைகள் முழுவதையும் ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு வட்டியுடன் சேர்த்து விண்ணப்பதாரர் செலுத்துதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு செலுத்துவதன் பேரில் மீதமுள்ள வட்டியும் தண்டத்தொகை முழுவதும் கைவிடப்படுதல் வேண்டும்.

(d) தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை அல்லது அவை இரண்டின் நிலுவைகள் தொடர்பானதாக அது இருக்குமிடத்து மற்றும் விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியன்று வசூலிப்பதற்கு நேரிணையான வரி நிலுவைகள் எதுவும் நிலுவையில் இல்லாதவிடத்து, விண்ணப்பதாரர் தண்டத்தொகையில் நூற்றுக்கு பத்து விழுக்காட்டினையும் வட்டித்தொகையில் நூற்றுக்கு இருபத்தைந்து விழுக்காட்டினையும் செலுத்துதல் வேண்டும்; மீதமுள்ள தண்டத்தொகையும் வட்டித்தொகையும் கைவிடப்படுதல் வேண்டும்.

**8.** **(1)** பெயர் குறிப்பட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, **6**–ஆம் பிரிவின் **(1)**–ஆம் உட்பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட தொகையைச் செலுத்தியது பற்றி பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, தெளிவுறக் காண்பதன்பேரில், ஆணை ஒன்றின் வாயிலாக, வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை நிலுவைகளைத் தீர்த்து வைத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் சான்றிதழ் ஒன்றினை வழங்குதல் வேண்டும்; மற்றும் அதன்பேரில் அத்தகைய விண்ணப்பதாரர் அத்தகைய வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை நிலுவையின் மீதமுள்ள தொகையைச் செலுத்தும் கடப்பாட்டிலிருந்தும் விடுவிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்தையும் பொறுத்த அளவில், தனித்தனியாக சான்றிதழை வழங்குதல் வேண்டும். நிலுவைகளைத் தீர்வு செய்தலும் சான்றிதழை வழங்குதலும்.

**(2)** பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, எழுத்துருவில் பதிவு செய்ய வேண்டிய காரணங்களுக்காக வரி, தண்டத்தொகை அல்லது வட்டித் தொகையைத் தீர்வு செய்ய மறுக்கலாம்:

**வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவின்படியான ஆணை எதுவும், அவ்வாறு ஆணை வழங்க மறுத்ததற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு நியாயமானதொரு வாய்ப்பினை அந்த விண்ணப்பதாரருக்கு அளிக்காமல் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

**(3)** இது குறித்து அரசினால் அறிவிக்கை செய்யப்பட்டவாறான அதிகார அமைப்பானது, பெயர் குறிப்பட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பினால், **(1)**–ஆம் உட்பிரிவின்படியான சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள்ளாக, எந்த நேரத்திலும் பதிவுருவில் பார்த்த மாத்திரத்திலேயே தென்படுகின்ற பிழை எதனையும் சரிசெய்து அச்சான்றிதழை மாற்றியமைக்கலாம்:

**வரம்புரை:** ஆனால், விண்ணப்பதாரரை எதிர்மாறாகப் பாதிக்கின்ற அத்தகைய சரி செய்தல் எதுவும், அத்தகைய சரி செய்தலுக்கெதிராகக் காரணம் காட்டுமாறு நியாயமான வாய்ப்பு ஒன்றினை அந்த விண்ணப்பதாரருக்கு அளிக்காமல், பிறப்பிக்கப்படுதல் கூடாது.

தீர்வு செய்யப்பட்ட வழக்குகளை மீண்டும் தொடர்வதற்குத் தடை.

**9.** 8–ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்று, அது எந்தத்தீர்வு தொடர்பானதாக இருக்கின்றதோ, அந்தத் தீர்வைப் பொறுத்த வரையில் அறுதியானதாக இருத்தல் வேண்டும். அத்தகைய சான்றிதழில் அடங்கிய பொருட்பாடு எதனையும் பொறுத்தவரையில், மறு ஆய்வு அல்லது சீராய்வு நடவடிக்கை எதிலுமோ அல்லது தொடர்புடைய சட்டத்தின்படியான பிற நடவடிக்கை எதிலுமோ மீண்டும் விசாரணையைத் தொடங்குதல் கூடாது.

மேல்முறையீட்டையும் சீராய்வையும் திரும்ப் பெறுதல்

**10.** தொடர்புடைய சட்டத்தின் வகைமுறை எதிலும் மாறாக என்ன அடங்கியிருந்த போதிலும், 8ஆம் பிரிவின்படி, சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிற, தொடர்புடைய சட்டத்தின்கீழ் வரிக்கணிப்பு அதிகார அமைப்பு அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அல்லது நேர்விற்கேற்ப சீராய்வு அதிகார அமைப்பிற்கு முன்பாக கால அளவு எதனையும் பொறுத்த அளவில் முடிவுறாது உள்ள நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்வு எதுவும், விண்ணப்பதாரரால், 5–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். இந்தச் சட்டத்தின்படி வரி தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை ஆகியவற்றின் நிலுவைகளைத் தீர்வு செய்வதற்கான விண்ணப்பத்தினைத் தாக்கல் செய்த தேதிக்குப் பின்னர் வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை ஆகியவற்றின் நிலுவைகளைத் தீர்வு செய்யும் காலம் வரையிலும், செலுத்தப்பட்ட தொகையினைத் திரும்பப் பெறுவதற்கான உரிமை கோரிக்கைக்கான விளைவை ஏற்படுத்துகிற வகையில் வரிக் கணிப்பு அதிகார அமைப்பால் அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பால் அல்லது சீராய்வு அதிகார அமைப்பால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

ஒரு சில நேர்வுகளில் அதிகார அமைப்பானது முடிவு செய்வதற்கு முற்படுதல் கூடாது என்பது.

**11.** அதிகார அமைப்பு எதுவும், எந்த வரிக்கணிப்பு ஆண்டினைப் பொறுத்த வரையிலும் 5–ஆம் பிரிவின் (3–)ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பத்தின் நகல் ஒன்று பெறப்பட்டுள்ளதோ, அந்த வரிக்கணிப்பு ஆண்டு தொடர்பாக தொடர்புடைய சட்டத்தின்படியான நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்வு எதனையும் முடிவு செய்வதற்கு முற்படுதல் கூடாது:

**வரம்புரை:** ஆனால், 8–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின்படி பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பினால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றின் மூலமாக விண்ணப்பதாரருக்கு 8–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட சான்றிதழ் ஒன்று மறுக்கப்படுமானால், தொடர்புடைய சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில், அத்தகைய நடவடிக்கையை அல்லது மேல்முறையீட்டினை அல்லது சீராய்வினை முடிவு செய்வதற்கு அத்தகைய அதிகார அமைப்பு முற்படுதல் வேண்டும்.

சான்றிதழ் பின்னறவு செய்யப்படுதல்.

**12.** (1) 9–ஆம் பிரிவிலோ அல்லது 10–ஆம் பிரிவிலோ என்ன அடங்கியிருந்தபோதிலும், முக்கியமான தகவலை அல்லது விவரங்களை மறைத்ததன் மூலமாகவோ, அல்லது சரியற்ற அல்லது பொய்யான தகவலை அல்லது விவரங்களைக் கொடுத்ததன் மூலமாகவோ, 8–ஆம் பிரிவின்படி சான்றிதழை விண்ணப்பதாரர் ஒருவர் பெற்றுள்ளார் என்பதாகப் பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்புக்குத் தோன்றுகிறவிடத்து, அத்தகைய சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக் காலஅளவிற்குள் அத்தகைய பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அமைப்பானது, எழுத்துருவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காகவும் மற்றும் விண்ணப்பதாரருக்கு அதற்குரிய காரணம் காட்டுவதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றினை வழங்கியதற்குப் பின்னரும், 8ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட சான்றிதழைப் பின்னறவு செய்யலாம்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி சான்றிதழ் ஒன்று பின்னறவு செய்யப்பட்டால் அத்தகைய சான்றிதழில் அடங்கக்கூடிய, தொடர்புடைய சட்டத்தின்படியான நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது நேர்விற்கேற்ப சீராய்வானது, 9–ஆம் பிரிவின் அல்லது 10–ஆம் பிரிவின் வகைமுறைகளில் என்ன இருந்தபோதிலும், அவ்வாறு பின்னறவு செய்யப்பட்டதன்பேரில், உடனடியாக, உயிர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அல்லது பழைய நிலைக்கு கொண்டுவரப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்வானது இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்வில் நிலுவையில் உள்ள வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை நிலுவை குறித்து எப்போதுமே, தீர்வு எதுவும் செய்யப்பட்டிராதது போன்று, தொடர்புடைய சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் முடிவு செய்யப்படுதல்வேண்டும்.

(3) (1)–ஆம் உட்பிரிவிற்கு இணங்கிய வகையில் ஒரு சான்றிதழ் பின்னறவு செய்யப்பட்ட நேர்வில், 6–ஆம் பிரிவின்படி விண்ணப்பதாரரால் செலுத்தப்பட்ட தொகையானது, பின்னறவு செய்யப்பட்ட சான்றிதழின் கால அளவிற்காகத் தொடர்புடைய சட்டத்தின்படி செலுத்தத்தக்க தொகைக்கான செலுத்தமாகக் கருதப்படுதல் வேண்டும்.

**13.** தொடர்புடைய சட்டத்தின்படி விண்ணப்பதாரரின்மீது அப்போதைக்கு அதிகார வரம்பு பெற்றுள்ள தொடர்புடைய சட்டத்தின்கீழ் அமைந்த வரிக்கணிப்பு அதிகார அமைப்பு அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அல்லது நேர்விற்கேற்ப சீராய்வு அதிகார அமைப்புக்கு, பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, தொடர்புடைய சட்டத்தின்படி அதிகாரஅமைப்புகளுக்குத் தகவல் அனுப்பப்படுதல் வேண்டும் என்பது.

(a) 5–ஆம் பிரிவின்படி விண்ணப்பதாரர் ஒருவரால் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டது என்ற விவரத்தை;

(b) 8–ஆம் பிரிவின்படி பெயர் குறிப்பட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பினால் ஆணை எதுவும் பிறப்பிக்கப்பட்டது என்ற விவரத்தை;

(c) 12–ஆம் பிரிவின்படி சான்றிதழ் எதுவும் பின்னறவு செய்யப்பட்டது என்பதான விவரத்தை; மற்றும்

(d) அது தேவையானதெனக் கருதக்கூடிய அத்தகைய பிற பொருட்பாடுகளை;

வகுத்துரைக்கப் படக்கூடிய படிவத்திலும் வகுத்துரைக்கப்படக்கூடிய முறையிலும் வகுத்துரைக்கப் படக்கூடிய கால அளவிற்குள்ளாகவும் தெரிவித்தல் வேண்டும்.

**14.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசானது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் ஆணை ஒன்றின் வாயிலாக அந்த இடர்ப்பாட்டினை நீக்கலாம்: இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**வரம்புரை:** ஆனால், இந்தச் சட்டமானது நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து ஓராண்டு முடிவடைந்ததற்குப் பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

**15. (1)** அரசானது, ஒரு முன்தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையிலோ அல்லது இனி வரும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையிலோ இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும். மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தால் அன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தால் அன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் மற்றும் 14–ஆம் பிரிவின்படி செய்யப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், சட்ட பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி, அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதியோ அல்லது அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அதன்பின்பு அந்த விதியானது, அல்லது அறிவிக்கையானது அல்லது ஆணையானது அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அல்லது, நேர்விற்கேற்ப, செயல்வடிவம் பெறாது போதல் வேண்டும். எனினும், அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதியின்படி, அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010ஆம் ஆண்டு மே திங்கள் 26–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 21/2010**

**சிறுபான்மையினருக்காக மாநில ஆணையம் ஒன்றை அமைத்துருவாக்குவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**அத்தியாயம்-I**

**முன்னுரை**

குறுந்தலைப்பும் அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம் 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கையின் மூலம், குறிக்கக்கூடிய அத்தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி:—

(*a*) ''ஆணையம்'' என்றால், 3ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் என்று பொருள்படும்;

(*b*) ''அரசு'' என்றால், மாநில அரசு என்று பொருள்படும்;

(*c*) ''உறுப்பினர்'' என்றால், ஆணையத்தின் ஓர் உறுப்பினர் என்று பொருள்படுவதோடு, தலைமையாளரையும், செயலுறுப்பினரையும் உள்ளடக்கும்;

(*d*) ''சிறுபான்மையினர்'' என்றால், சிறுபான்மையினர் என அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ள நிலையில் தமிழ்நாடு மாநிலத்தில் வசித்து வரும் சிறுபான்மை சமுதாயங்களைச் சார்ந்த நபர்கள் என்று பொருள்படும்;

(*e*) ''வகுத்துரைக்கப்பட்டது'' என்றால், விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்.

**அத்தியாயம்-II**

**தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்**

ஆணையத்தை அமைத்துருவாக்குதல்.

**3.** (1) அரசு, அறிவிக்கை வாயிலாக, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் என்றழைக்கப்படும் ஓர் அமைப்பை, இந்தச் சட்டத்தின்படி, அதற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துவதற்கும் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அலுவற்பணிகளை ஆற்றுவதற்கும் அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) ஆணையமானது, பின்வருபவர்களைக் கொண்டிருக்கும்:–

(*a*) சிறப்பான, திறமையான மற்றும் நேர்மையான நபர்களுக்கிடையேயிருந்து, அரசால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய ஒரு தலைமையாளர் மற்றும் பிற ஆறு உறுப்பினர்கள்.

**வரம்புரை:** ஆனால், தலைமையாளர் உள்ளடங்கலான உறுப்பினர்கள், சிறுபான்மையினர் சமுதாயங்களுக்கிடையேயிருந்து இருத்தல் வேண்டும்; மற்றும்

(*b*) சிறுபான்மையினர் நல ஆணையர்–செயலுறுப்பினர்

(3) ஆணையத்தின் தலைமையிடம் சென்னையில் இருத்தல் வேண்டும் மற்றும் அரசு, மாநிலத்தில் வேறு இடம் எதிலும் ஆணையத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலகங்களை நிறுவலாம்.

**4.** (1) அரசால் இதன் பொருட்டு குறித்துரைக்கப்படலாகும் மூன்றாண்டிற்கு மிகாத அத்தகைய கால அளவிற்கு தலைமையாளரும், உறுப்பினர் ஒவ்வொருவரும் பதவி வகித்தல் வேண்டும்.

தலைமையாளர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலமும் பணி நிபந்தனைகளும்.

(2) தலைமையாளரோ உறுப்பினர் ஒருவரோ, அரசுக்கு எழுத்து மூலம் தெரிவித்து தலைமையாளர் அல்லது நேர்வுக்கேற்ப, உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம். ஆனால் அவர் தம் பதவி விலகலானது ஏற்றுக்கொள்ளப்படும் வரையில் தொடர்ந்து பதவியில் இருந்து வருதல் வேண்டும்.

(3) தலைமையாளருக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கத்தக்க மதிப்பூதியமும் படித்தொகைகளும் மற்றும் பணி பற்றிய வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(4) (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், நபரொருவர்,

(*a*) அவர், தீர்க்கப்படாத நொடிப்பு நிலையராகியிருக்கிறவராயின்;

(*b*) அவர், அரசின் கருத்தில் ஒழுக்கக் கேட்டினை உள்ளடக்கிய குற்றச் செயல் ஒன்றிற்காக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளவராக இருப்பாராயின்;

(*c*) அவர், மனச் சீர்கேடுற்றவராகி, ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் அவ்வாறு விளம்பப்பட்டிருப்பாராயின்;

(*d*) அவர், செயற்பட மறுப்பாராயின் அல்லது செயல்படத் திறனற்றுப் போவாராயின்;

(*e*) அவர், ஆணையத்தின் அனுமதி இல்லாமல், தொடர்ந்தாற்போல் ஆணையத்தின் மூன்று கூட்டங்களுக்கு வராதிருப்பாராயின்;

(*f*) அரசின் கருத்தில், அவர் பொதுமக்களின் நலனுக்குக் கேடு விளைவிக்கும் வகையில் பதவியில் தம்மை அந்நபர் தொடர்ந்திருக்குமாறு செய்யும் பொருட்டு தம் தலைமையாளர் அல்லது நேர்விற்கேற்ப தம் உறுப்பினர் பதவி நிலையைத் தவறாகப் பயன்படுத்துவாராயின்,

அரசானது அவரைத் தலைமையாளர் அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குதல் வேண்டும்;

**வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவின்படி, அப்பொருட்பாட்டில் உறுப்பினர் எவருக்கும் அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பொன்று கொடுக்கப்படும் வரையில் அந்த உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்குதல் கூடாது.

(5) (2) ஆம் உட்பிரிவின்படியோ அல்லது (4)ஆம் உட்பிரிவின்படியோ அல்லது மற்றபடியோ, ஏற்பட்ட காலியிடம் ஒன்று, அரசினால் புதிதாக பெயர்குறித்து நியமிப்பதன் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும். மற்றும் எவர் காலியிடத்தில் அவர் அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்பட்டாரோ, அவர் வகித்து விட்டு எஞ்சிய கால அளவிற்கு, அந்தக் காலியிடம் ஏற்படாததைப் போன்றே பதவி வகித்து வருதல் வேண்டும்.

**வரம்புரை:** ஆனால், அந்தத் தலைமையாளர் நீங்கலாகப் பிற உறுப்பினர் ஒருவரின் ஒரு காலியிடம், அந்த உறுப்பினரின் பதவிக் காலம் எந்தத் தேதியில் முடிவடைகின்றதோ, அந்தத் தேதிக்கு அடுத்து முந்திய ஆறு திங்களுக்குள் ஏற்படுமாயின், அத்தகைய காலியிடம் எதுவும் நிரப்பப்படுதல் கூடாது.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ‘‘உறுப்பினர்’’ என்றால், ‘‘செயலுறுப்பினரை’’ உள்ளடக்காது.

**5.** (1) ஆணையமானது தேவைப்படும் போதெல்லாம் குறைந்தது ஒரு திங்களுக்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டும் மற்றும் தலைமையாளர் பொருத்தமெனக் கருதக் கூடிய அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும்.

ஆணையத்தால் நடைமுறை ஒழுங்குமுறைப் படுத்தப்படுதல்.

(2) ஆணையம், அதன் சொந்த நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்துதல் வேண்டும்.

(3) ஆணையத்தின் அனைத்து ஆணைகளும் முடிவுகளும் அதன் செயலுறுப்பினரால் அல்லது இதன் பொருட்டு செயலுறுப்பினால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவராலும் அதிகாரபூர்வமானதாக்கப்படுதல் வேண்டும்.

காலியிடங்கள் முதலானவை, ஆணையத்தின் நடவடிக்கை களைச் செல்லத் தகாததாக ஆக்குதல் கூடாது எனல்.

**6.** ஆணையத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் பொருட்பாட்டின் தகுதிப்பாடுகளைப் பாதிக்காத நிலையில் ஆணையத்தில் காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது அதன் அமைப்பில் குறைபாடு எதுவும் இருக்கிறது அல்லது தலைமையாளராக அல்லது ஓர் உறுப்பினராகச் செயல்படுகின்ற நபர் ஒருவரைப் பெயர்குறித்து நியமிப்பதில் குறைபாடு எதுவும் இருக்கிறது அல்லது ஒரு கூட்டத்தை நடத்துவதற்காகப் பிறப்பிக்கப்படும் அறிவிப்பு உள்ளடங்கலாக, ஆணையத்தின் நடைமுறையில் முறைகேடு எதுவும் உள்ளது என்ற காரணத்தினால் மட்டுமே, ஆட்சேபிக்கப்படுதலோ அல்லது செல்லத் தகாததோ ஆகாது.

ஆணையத்தின் அதிகாரிகளும் பிற பணியாளர்களும்.

**7.** (1) அரசு, இந்தச் சட்டத்தின்படி ஆணையத்தின் அலுவற் பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஆணையத்தில் வகை செய்தல் வேண்டும்.

(2) ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்களும் படித் தொகைகளும் மற்றும் பிற பணிவரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(3) (1)–ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அலுவலர்களும் பணியாளர்களும் தலைமையாளரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருதல் வேண்டும்.

## அத்தியாயம் III

## ஆணையத்தின் அலுவற்பணிகள்.

ஆணையத்தின் அலுவற் பணிகள்.

**8**. (1) 1992ஆம் ஆண்டு சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையச் சட்டத்தின் 9–ஆம் பிரிவின்படி சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையத்தின் அலுவற்பணிகளின் செயல்பாட்டிற்கு உட்பட்டு, ஆணையத்தின் அலுவற்பணிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:– மையச் சட்டம் 19/1992.

(*a*) சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்காக அரசமைப்பிலும், மாநில சட்டமன்றத்தால் செய்யப்பட்ட சட்டங்களிலும் வகை செய்யப்பட்டுள்ள பல்வேறு பாதுகாப்பு வழிமுறைகள் செயல்படுவதை ஆராய்தல்;

(*b*) அனைத்து பாதுகாப்பு வழிமுறைகளும் திறம்பட செயல்படுத்தப்படுவதையும் நிறைவேற்றப்படுவதையும் உறுதி செய்யும் பொருட்டு பரிந்துரைகள் செய்தல்;

(*c*) சிறுபான்மையினருக்காக அரசமைப்பிலும், மாநில சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களிலும் மற்றும் அரசின் கொள்கைகளிலும் மற்றும் திட்டங்களிலும் வகை செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு வழிமுறைகள் செயல்படுவதை கண்காணித்தல்;

(*d*) சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகளைத் தவிர்ப்பது குறித்த பிரச்சினைகள் மீது ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மற்றும் பகுப்பாய்வுகள் நடத்துதல்;

(*e*) அரசு நிறுவனங்கள், அரசு மற்றும் அரசு சார்ந்த அமைப்புகள் ஆகியவற்றின் பணிகளில் சிறுபான்மையினரின் சார்பாற்றத்தின் உண்மை மதிப்பீட்டினைச் செய்தல் மற்றும் சார்பாற்றம் போதுமானதாகயில்லாத நேர்வில், விரும்பிய நிலையினை அடைவதற்கான வழிவகைகள் குறித்து கருத்துரை வழங்குதல்;

(*f*) மாநிலத்தில் சமுதாய நல்லிணக்கத்தை பேணிவருவதையும் மேம்படுத்துவதையும் உறுதிசெய்வதற்காகப் பரிந்துரைகளைச் செய்தல்;

(*g*) அரசிற்கு, வகுத்துரைக்கப்பட்ட கால இடைவெளிகளில் காலமுறை அறிக்கைகள் அனுப்புதல்;

(*h*) சிறுபான்மையினரின் நலன் மற்றும் மேம்பாடு குறித்து ஆணையம் முக்கியமானதெனக் கருதும் பிற பொருட்பாடு எதனையும் ஆராய்ந்து உரிய பரிந்துரையைச் செய்தல்;

(*i*) சிறுபான்மையினரின் குறைகளைப் பரிசீலனை செய்து, அவ்வப்போது உரிய தீர்வுகள் குறித்து கருத்துரை வழங்குதல் ;

(*j*) சிறுபான்மையினரின் உரிமைகளும் பாதுகாப்புகளும் பறிக்கப்படுவது பொறுத்த திட்டவட்டமான முறையீடுகளை கவனித்து அத்தகைய பொருட்பாட்டினை உரிய அதிகார அமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல்; மற்றும்

(*k*) அரசினால் அதனிடம் சுட்டியனுப்பப்படும் பிற பொருட்பாடுகள் எவையும்.

மையச் சட்டம் V/1908.

(2) ஆணையம், இந்த அலுவற்பணிகளில் எதனையும் ஆற்றுகையில், 1908ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைத் தொகுப்பு சட்டத்தின்படி, ஓர் உரிமை வழக்கை விசாரணை செய்கின்ற ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும், குறிப்பாகப் பின்வரும் பொருட்பாடுகளைப் பொறுத்த அதிகாரங்களையும் கொண்டிருக்கும்; அதாவது:–

*(a)* நபர் எவருக்கும் அழைப்பாணை விடுத்து, அவரின் வருகையை வலியுறுத்தி, உறுதிமொழியின் பேரில் அவரை விசாரித்தல்;

*(b)* ஆவணம் எதையும் கண்டறிந்து தாக்கல் செய்யக்கோருதல்;

*(c)* ஆணை உறுதி ஆவணங்களின்பேரில் சான்று பெறுதல்;

*(d)* நீதி மன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் பொதுப் பதிவுரு அல்லது அதன்படி எதனையும் கோரிப் பெறுதல்;

*(e)* சாட்சிகளையும் ஆவணங்களையும் விசாரிப்பதற்கு ஆணையங்களை ஏற்படுத்தி ஆணை பிறப்பித்தல்; மற்றும்

*(f)* வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதுவும்;

(3) அரசு, ஆணையத்தின் பரிந்துரைகளை, அப்பரிந்துரைகளின் பேரில் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருதப்படும் நடவடிக்கை குறித்தும் அத்தகைய பரிந்துரைகளில் எவையேனும் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருப்பின், அவற்றிற்கான காரணங்கள் குறித்தும் விளக்குகின்ற குறிப்புடன் சேர்த்து சட்டமன்றப் பேரவை முன்பு வைப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் IV.

## நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை.

அரசு வழங்கும் மானியங்கள்.

**9.** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு, அரசு பொருத்தமெனக் கருதலாகிறவாறான அத்தகைய பணத் தொகையை மானியங்கள் என்ற வகையில் ஆணையத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆணையம், இந்தச் சட்டத்தின்படியான அலுவற் பணிகளை நிறைவேற்றுவதற்காக, அது பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய தொகைகளைச் செலவு செய்யலாம்.

(3) தலைமையாளருக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படத்தக்க மதிப்பூதியமும் படித்தொகைகளும், 7ஆம் பிரிவில் சுட்டப்பட்ட செயலுறுப்பினர், அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்கள், படித்தொகைகள் மற்றும் ஓய்வூதியங்கள் உள்ளிட்ட நிருவாகச் செலவினங்கள், (1)ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட மானியங்களிலிருந்து வழங்கப்படுதல் வேண்டும்.

ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை.

**10.** (1) ஆணையத்தின் கணக்குகள், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையிலும் படிவத்திலும் பேணி வரப்படுதல் வேண்டும். ஆணையமானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் ஆண்டுக் கணக்கு விவர அறிக்கையொன்றை தயாரித்தல் வேண்டும்.

(2) அரசு, இதன் பொருட்டு நியமிக்கக்கூடிய அத்தகைய தணிக்கையாளரால் ஆணையத்தின் கணக்குகள் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) தணிக்கை நோக்கங்களுக்காக, (2)ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளர், வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் அதிகார உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) செயலுறுப்பினர், தணிக்கை அறிக்கையை அச்சிடுவதற்கும் அதன் அச்சுப்படியை அதன் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்பிவைப்பதற்கும், அத்தகைய அறிக்கையை ஆணையத்தின் அடுத்தக் கூட்டத்தில் அதன் பரிசீலனைக்காக, ஆணையத்தின் முன் வைப்பதற்கும் ஆவன செய்தல் வேண்டும்.

(5) ஆணையம், தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப்படக் கூடிய குறைபாடு அல்லது முறைகேடு எதனையும் உடனே களைவதற்கு உரிய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(6) தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட, ஆணையத்தின் கணக்குகள், தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து ஆணையம் அதன் மீது வழங்கும் குறிப்புகளுடன், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(7) அரசு, தணிக்கை அறிக்கையில் குறைபாடுகள் எவையேனும் தெரிவிக்கப்பட்டிருக்குமேயாயின், எழுத்துவாயிலான ஆணை மூலமாக, அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய கால அளவிற்குள், அக்குறைபாடுகளைக் களைவதற்கு அந்த ஆணையில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடவடிக்கையை எடுக்குமாறு ஆணையத்தைப் பணிக்கலாம் மற்றும் ஆணையம் அத்தகைய பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

ஆண்டறிக்கை.

**11.** ஆணையம், நிதி ஆண்டு ஒவ்வொன்றிற்கும் அதன் தணிக்கை அறிக்கையில், முந்தைய நிதியாண்டின்போதான அதன் நடவடிக்கைகள் முழுவதையும் விவரமாகக் கொடுத்து, வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நேரத்திலும் தயாரித்து, அரசிற்கு அதன் படி ஒன்றினை அனுப்புதல் வேண்டும்.

ஆண்டறிக்கையும் தணிக்கை அறிக்கையும் சட்டமன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

**12.** ஆண்டறிக்கையை, அதில் அடங்கிய பரிந்துரைகளில் அரசு தொடர்பானவற்றின் மீது எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற குறிப்புடனும் மற்றும் அந்த தணிக்கை அறிக்கையையும் சேர்த்து அந்த அறிக்கைகள் பெறப்பட்டவுடன் எவ்வளவு விரைவில் கூடுமோ, அவ்வளவு விரைவில் அந்த அறிக்கையை சட்டமன்றப் பேரவை முன்பு வைப்பதற்கு அரசு ஆவன செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் V.

## பல்வகை.

ஆணையத்தின் தலைமையாளர் உறுப்பினர்கள் பணியாளர் தொகுதியினர் முதலானோர் பொது ஊழியர்கள் ஆவர்.

**13.** இந்தச் சட்டத்தின் வகை முறைகளில் எதனையும் ஒட்டி அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது பணிப்பாணை எதனையும் ஒட்டி செயல்படுகின்ற அல்லது செயல்படுவதாகப் புலப்படுகின்றபோது, ஆணையத்தின் தலைமையாளர், உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்கள், இந்திய தண்டனைச் சட்டத் தொகுப்பின் 21ஆம் பிரிவின் பொருளின்படி, பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும். மையச் சட்டம் XLV/1860.

நல்ல எண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**14.** இந்தச் சட்டத்தினை ஒட்டி அல்லது இதன்படி செய்யப்பட்ட, அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, ஆணை அல்லது பணிப்பாணையினை ஒட்டி நல்ல எண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், ஆணையத்தின் உறுப்பினர் எவருக்கும் எதிராக அல்லது அதன் அலுவலர் அல்லது பிற பணியாளர் எவருக்கும் எதிராக அல்லது அரசின் அல்லது ஆணையத்தின் பணிப்பாணையின்படிச் செயல்படுகின்ற நபர் எவருக்கும் எதிராக, உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**15.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதனவாயிராத வகையில், அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவையென்றோ உகந்தவையென்றோ அதற்கு தோன்றுகின்ற வகைமுறைகளைச் செய்யலாம்.

**வரம்புரை:** ஆனால், அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதலாகாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**16.** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் முன் சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு ஊறின்றியும் அத்தகைய விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் எவற்றிற்குமோ வகை செய்யலாம்; அதாவது:–

(*a*) தலைமையாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படத்தக்க மதிப்பூதியம் மற்றும் படித்தொகைகள் மற்றும் 4–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின்படி தலைமையாளர் மற்றும் உறுப்பினர்களின் பணி பற்றிய வரையறைகளும், நிபந்தனைகளும் மற்றும் 7–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின்படி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படத்தக்க சம்பளங்களும், படித்தொகைகளும்; மற்றும் பிற பணி வரையறைகளும் நிபந்தனைகளும்.

(*b*) 10–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி கணக்குகள் எந்த படிவத்திலும் முறையிலும் மற்றும் ஆண்டு கணக்குகளின் விவர அறிக்கை எந்த படிவத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதும்;

(*c*) 11–ஆம் பிரிவின்படி ஆண்டறிக்கை எந்தப் படிவத்தில் மற்றும் எந்த நேரத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதும்;

(*d*) இந்தச் சட்டத்தின்படி வேண்டுறுத்தப்படக்கூடிய அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதுவும்;

(3) (*a*) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதிகள் அனைத்தும், **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(*b*) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்டதொரு நாளில் அவை நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அதை அடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அந்த விதியோ, அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படுதலோ பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்ற பேரவை முடிவு செய்யுமாயின், அதன் பின்பு அந்த விதியோ அறிவிக்கையோ அல்லது ஆணையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட படிவத்தில் மட்டுமே செயல் வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப செயல் வடிவம் பெறாது போதல் வேண்டும். எனினும் அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது செயல் வடிவம் பெறாது போகச் செய்வது எதுவும், அந்த விதியின்படியோ அறிவிக்கையின்படியோ அல்லது ஆணையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு மே திங்கள் 26–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 22/2010**

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**19–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தின், 19–ஆம் பிரிவில் (19)–ஆம் உட்பிரிவிற்குப் பின்னர், பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :– **தமிழ்நாடு சட்டம் 32/2006.**

"(20) இந்தப் பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், பதிவு பெற்ற வணிகர் எவரும், அவர் கொள்முதல் செய்த பொருள்களின் விலையை விடக் குறைவாக விற்பனை செய்தால், அந்த பொருள்களின் உள்ளீட்டு வரி வரவானது, விற்றுமுதல் வரியை விட அதிகமாக இருக்கிற தொகை அளவிற்கு, எதிர் மாற்றம் செய்யப்படுதல் வேண்டும்.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 6–ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 23/2010**

## 1961–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம் 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயச்) திருத்தச் சட்டம் என வழங்கப் பெறும்.

(2) (a) 3-ஆம் பிரிவானது 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) 4-ஆம் பிரிவானது 1987-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15-ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

விளம்புகை

**2.** அரசமைப்பின் 39-ஆம் உறுப்பின் (b) (c) ஆகிய கூறுகளில் அமைக்கப்பட்டுள்ள கொள்கைகளை உறுதி செய்யும் வகையில் அரசின் கொள்கைக்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக இந்தச் சட்டமானது இயற்றப்படுகிறது என இதன்மூலம் விளம்பப்படுகிறது.

தமிழ்நாடு சட்டம் 58/1961.

37–A எனும் பிரிவிற்கான திருத்தம்.

**3.** (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயச்) சட்டத்தின் 37-A எனும் பிரிவில் (1)-ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, அதன் கீழ் வரும் விளக்கம் நீங்கலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“(1) தொழில் அல்லது வணிக நிறுவனம் எதுவும் உச்சவரம்பு பரப்பிடத்திற்கு அதிகமாக நிலம் எதனையும் பெற விரும்புமானால் அல்லது உச்சவரம்பு பரப்பிடத்திற்கு அதிகமாக பெற்றுள்ள நிலத்தை வைத்திருக்க விரும்புமானால் அது, அத்தகைய நிலத்தைப் பெறுவதற்கான அனுமதிக்காக அல்லது நேர்விற்கேற்ப அவ்வாறு பெறப்பட்ட நிலத்தை வைத்திருப்பதற்கான அனுமதிக்காக அரசிடம் விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் எழுத்துருவில் இருத்தல் வேண்டும் என்பதோடு வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய விவரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்:—

*வரம்புரை:*

ஆனால், அவ்வாறு பெறப்பட்ட நிலத்தை வைத்திருப்பதற்கான அனுமதிக்காக செய்யப்படும் விண்ணப்பம் ஒன்று வகுத்துரைக்கப்படக்கூடிய கால அளவிற்குள்ளாக செய்யப்படுதல் வேண்டும்”.

37–B எனும் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச்சட்டத்தில் 37-B எனும் பிரிவில் (1) ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக அதன் கீழ் வரும் விளக்கம் நீங்கலாக, பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும் அதாவது:—

“(1) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும் ஆனால் 73–ஆம் பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு,-

(i) கல்வி நிறுவனம் அல்லது மருத்துவமனை எதனையும் அமைப்பதற்கான; அல்லது

(ii) கல்வி நிறுவனம் அல்லது மருத்துவமனை எதற்கும் கூடுதலாக என்ற வகையில் அதனை மாற்றியமைப்பது என்ற வகையில் அல்லது மேம்பாடு செய்வது என்ற வகையில் தற்போதுள்ள கல்வி நிறுவனம் அல்லது மருத்துவமனை எதனையும் விரிவாக்கம் செய்வதற்கான, நோக்கத்திற்காக

(*a*) 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் (1)–ஆம் நாளுக்கு முன்னதாக உருவாக்கப்பட்ட பொதுப் பொறுப்பாட்சி எதுவும், உச்சவரம்புப் பரப்பிடத்திற்கு அதிகமாக நிலம் எதனையும் பெற விரும்புமானால் அல்லது உச்ச வரம்பு பரப்பிடத்திற்கு அதிகமாக பெற்றுள்ள நிலத்தை வைத்திருக்க விரும்புமானால்; மற்றும்

(*b*) 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் (1)–ஆம் நாளுக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட பொதுப் பொறுப்பாட்சி எதுவும், நிலம் எதனையும் பெற விரும்புமானால் அல்லது பெற்றுள்ள நிலத்தை வைத்துக் கொள்ள விரும்புமானால்,

அது, அத்தகைய நிலத்தைப் பெறுவதற்கான அனுமதிக்காக அல்லது நேர்விற்கேற்ப அவ்வாறு பெறப்பட்ட நிலத்தை வைத்திருப்பதற்கான அனுமதிக்காக அரசிடம் விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் எழுத்துருவில் இருத்தல் வேண்டும் என்பதோடு வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய விவரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*வரம்புரை:*

ஆனால், அவ்வாறு பெறப்பட்ட நிலத்தை வைத்திருப்பதற்கான அனுமதிக்காகச் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்று, வகுத்துரைக்கப்படக்கூடிய கால அளவிற்குள்ளாக செய்யப்படுதல் வேண்டும்.

**செல்லத் தக்கதாக்குதல்.**

**5.** முதன்மைச் சட்டத்திலோ அல்லது நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும், 2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணய)திருத்தச் சட்டமானது ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட தேதிக்கு முன்னதாக தொழில் அல்லது வணிக நிறுவனம் அல்லது பொதுப் பொறுப்பாட்சி எதனாலும் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும் மற்றும் முதன்மைச் சட்டத்தின் 37-A அல்லது 37-B எனும் பிரிவின்படி அரசினால் வழங்கப்பட்ட அனுமதி ஒவ்வொன்றும் 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயம்) திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 37-A, 37-B ஆகிய மேற்சொன்ன பிரிவுகள் எல்லா முக்கிய காலங்களிலும் நடைமுறையில் இருந்திருந்தாற் போன்றும் மேற்சொன்ன விண்ணப்பமும் அனுமதியும் அதன்படி செய்யப்பட்டிருந்தாற் போன்றும் வழங்கப்பட்டிருந்தாற்போன்றும் செல்லத்தக்கனவாகவும் செயல் விளைவு கொள்ளத்தக்கனவாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.